### முதல்வர் மு.க.ஸ்டாலினின் சீரிய நடவடிக்கையால் - உலகளாவிய திறன் மையங்கள் மூலம் மூன்றாண்டில்

# 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு உயர்தர வேலைவாய்ப்புகள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு - இளைஞர்கள் மகிழ்ச்சி !

**சென்னை, ஜூலை 18-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய நடவடிக்கையால் தமிழ்நாட்டில் பன்னாட்டு நிறுவனங்கள் அமைத்துள்ள உலகளாவிய திறன் மையங்கள் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயர்தர வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதால் இளைஞர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் உலகளாவிய திறன் மையங்களை கோவை மற்றும் மதுரையிலும் அமைக்க விரும்பும் நிறுவனங்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழ்நாட்டின் முதலமைச்சராக 2021ஆம் ஆண்டு மே 7ஆம் தேதி அன்று பொறுப்பேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிட வேண்டும் என்ற எண்ணத்தில் முனைப்புடன் செயல்பட்டு பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களை தமிழ்நாட்டில் தொடங்கிட முன்னெடுப்புப் பணிகளை மேற்கொண்டார்.



**முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு!**

அதன்படி 2030-ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்தவேண்டும் என்னும் ஒரு இலட்சிய இலக்கை நிர்ணயித்து அந்த இலக்கை எய்தும் வகையில் உயர் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் வேலை வாய்ப்புகள் மிகுந்த முதலீடுகளை ஈர்ப்பது என்ற வகையில் “முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு” என்ற இலட்சியத்துடன் முதல்வர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

**30 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!**

அந்த வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னை, கோவை, தூத்துக்குடி ஆகிய இடங்களிலும், மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின் ஆகிய நாடுகளிலும் நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடுகள் வாயிலாக மொத்தம் 9.61 இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு ஏறத்தாழ 30 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான ஒப்பந்தங்கள் நடைபெற்று இதுவரை தொழில் வளர்ச்சி வரலாற்றில் இல்லாத ஒரு மாபெரும் புரட்சி நிகழ்த்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்ற பின், 45 தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 27 தொழிற்சாலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாக 74 ஆயிரத்து 757 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. திராவிட மாடல் அரசால் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை 2009-2023-ல் முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. 2021ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் எண்ணிக்கை 2,032. இன்றைய நிலவரப்படி இது 4 மடங்கிற்கும் மேல் அதிகரித்து 8,416ஆக உயர்ந்துள்ளது. மகளிர் ஸ்டார்ட்அப்களின் எண்ணிக்கை 2021-ஆம் ஆண்டில் 966 ஆக இருந்தது, தற்போது மூன்று மடங்குக்கு மேல் அதிகரித்து 3,163 ஆக உயர்ந்துள்ளதே இந்த அரசின் செயல்பாட்டிற்குக் கிடைத்த வெற்றியாகும்.

**ஒன்றிய அரசு வெளியிட்ட பட்டியலில் தமிழ்நாடு முதல் நிலை!**

ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு உகந்த சூழலைக் கட்டமைத்துச் செயல்படும் மாநிலங்களின் பட்டியலை ஒன்றிய அரசு வெளியிட்டது. இதில் தமிழ்நாடு முதல் நிலையை பிடித்திருப்பதிலிருந்தே இந்த அரசின் சாதனையைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

**உலகளாவிய திறன் மையங்கள்!**

இந்நிலையில் தமிழ்நாடு அரசின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கொள்கையின்படி மாநிலத்தில் பன்னாட்டு நிறுவனங்களின் உலகளாவிய திறன் மையங்களை திராவிட மாடல் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி இந்த மையங்களில் அதிக ஊதியம் அளிக்கக்கூடிய பணியிடங்களுக்கான ஊதிய பட்டியல் மானியத்தை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

இதன் காரணமாக கடந்த 3 ஆண்டுகளில் 40 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்களது உலகளாவிய திறன் மையங்களை அமைத்துள்ளன.

இதன் மூலம், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயர்தர வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்கள் மகிழ்ந்து முதல்வருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்!**

இந்த மாத தொடக்கத்தில், Astra Zeneca நிறுவனம் சென்னையில் உள்ள அதன் உலகளாவிய திறன் மையத்தை விரிவாக்கம் செய்வதாக அறிவித்துள்ளது.

உலகளவில் AstraZeneca நிறுவனத்தின் மிகப்பெரிய மையமாக சென்னை மையம் திகழ உள்ளது.

இதைத் தவிர்த்து, ஃபைசர், உலக வங்கி, ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு, ஹிட்டாச்சி எனர்ஜி, ரெனால்ட் நிசான், அடிடாஸ், கேட்டர் பில்லர் போன்ற உலகளாவிய முன்னணி நிறுவனங்கள் தங்களின் மிகப்பெரிய திறன் மையங்களை தமிழ்நாட்டில் அமைத்துள்ளன.

**10 மில்லியன் சதுர அடியில் பன்னாட்டு நிறுவனங்கள்!**

கடந்த 2023ம் ஆண்டில் மட்டும் இதுவரை இல்லாத அளவில் சுமார் 10 மில்லியன் சதுர அடியில் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களின் திறன் மையங்களை சென்னையில் அமைத்துள்ளன.

**கோவை, மதுரையிலும் அமைய அழைப்பு!**

இதேபோன்று கோவை மற்றும் மதுரையிலும் உலகளாவிய திறன் மையங்களை அமைக்க விரும்பும் நிறுவனங்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தர தயாராக உள்ளதாக தமிழ்நாடு அரசின் தொழில் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

### தென்மேற்குப் பருவமழை தீவிரம்!

# தமிழ்நாட்டில் பலத்த மழை - அணைகள் வேகமாக நிரம்புகின்றன!

## நீலகிரிக்கு பேரிடர் மீட்புக் குழுவினர் விரைவு!

சென்னை, ஜூலை 18–

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை தீவிர மடைந்து பெய்து வருகிறது. இந்நிலையில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கடந்த மூன்று நாட்களாக விடாமல் தொடர் கன மழை பெய்து வருகிறது.

இதனால் பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள குளம், ஏரி உள்ளிட்ட நீர் நிலைகளில் நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது.

**ஆழியாறு அணை!**

இந்நிலையில் அதிக கன மழை காரணமாக ஆழியாறு அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்துள்ளது. தற்போதைய நிலவரப்படி ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 5 அடி உயர்ந்துள்ளது.

நேற்று காலை 7 மணி நிலவரப்படி 120 அடி கொள்ளளவு கொண்ட ஆழியாறு அணை நீர் மட்டம் 95.80 அடியாக உள்ளது. நேற்று முன்தினம் காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 91 அடியை எட்டி இருந்தது. இந்நிலையில் அணைக்கு வினாடிக்கு 3,356கன அடி தண்ணீர் வரத்துள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு 84கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுவதாக பொதுப் பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

**சிறுவாணி அணை!**

மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்து இருக்கின்றது சிறுவாணி அணை. அணையில் இருந்து பெறப்படும் நீரானது கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட 22வார்டுகள், கோவை மாவட்டத்தின் மேற்கு பகுதியில் உள்ள டவுன் பஞ்சாயத்துகள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு குடிநீர் ஆதாரமாக இருக்கின்றன.

இந்த நிலையில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் பெய்து வரும் கன மழையினால் சிறுவாணி அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் மூன்று அடிக்கு மேல் உயர்ந்து இருக்கிறது.

தற்பொழுது சிறுவாணி அணை நீர் மட்டம் 38.67 அடி உயர்ந்து உள்ளன.

மழை இன்றி கோடை காலத்தில் கடும் வறட்சியில் இருந்த சிறுவாணி அணை, கன மழையினால் நிரம்ப ஆரம்பித்து இருக்கின்றது. கடந்த ஜூன் மாதம் 23ஆம் தேதி 11.32 அடியாக இருந்த நிலையில் நேற்று 38.67 அடியாக உயர்ந்து இருக்கின்றது. நான்கு வாரத்துக்குள் 27.5அடி நீர்மட்டம் உயர்ந்து இருக்கின்ற நிலையில் மலை அடிவாரத்தில் 7சென்டி மீட்டர் மழை பெய்து இருந்த நிலையில் அணைக்கட்டு பகுதியில் 9 சென்டி மீட்டர் மழை பெய்து உள்ளது. மேற்கு தொடர்ச்சி மலையில் கன மழை பெய்வதால் அணையின் முழு கொள்ளளவான 45 அடி விரைவில் சிறுவாணி அணை எட்டும் என்று எதிர்பார்க்கின்றது.

**நீலகிரியில் கன மழை!**

நீலகிரி மாவட்டம் கூடலூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த 3 நாட்களாக இடைவிடாமல் மழை பெய்து வருகிறது. 16ஆம் தேதி முதல் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக சிறு சிறு ஆறுகள் மற்றும் நீரோடைகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கூடலூரில் பெய்து வரும் மழை காரணமாக மாயாற்றில் 2வது நாளாக நேற்றும் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. உதகையில் இருந்து தெப்பக்காடு வழியாக கூடலூர், கர்நாடகா செல்ல போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கனமழையால் ஏற்படும் பாதிப்புகளை சமாளிக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பேரிடர் மீட்புக்குழுவினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, உதகை, மஞ்சூர், தேவாலா மற்றும் கூடலூர் ஆகிய 4 இடங்களில் பேரிடர் மீட்புக்குழுவினர் தயார்நிலையில் உள்ளனர். ஒவ்வொரு குழுவிலும் தலா 10 பேர் மீட்பு உபகரணங்களுடன் தயாராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே தொரப்பள்ளி இருவயல் பகுதியில் காட்டாற்று வெள்ளம் காரணமாக குடியிருப்பு பகுதியில் தண்ணீர் புகுந்தது. இதனால், அப்பகுதியில் உள்ள 5 வீடுகளில் இருந்த 22 பேரை தீயணைப்புத் துறையினர் மற்றும் பேரிடர் மீட்பு குழுவினர் பத்திரமாக மீட்டு முகாம்களில் தங்க வைத்தனர்.

கர்நாடக மாநிலத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக, அங்குள்ள அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. இதனால், கே.ஆர்.எஸ். மற்றும் கபினி அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளன. இரு அணைகளில் இருந்தும் மொத்தம் 40 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்நிலையில், மேட்டூர் அணைக்கான நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை வினாடிக்கு 16 ஆயிரத்து 577 கன அடியாக இருந்த நீர்வரத்து, தற்போது 20 ஆயிரத்து 910 கன அடியாக அதிகரித்து உள்ளது.

இதனால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்ந்து 46 அடியாக உள்ளது. மேட்டூர் அணைக்கான நீர்வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை!**

காவிரி நீர்ப் பிடிப்பு பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக மழை பெய்து வருகிறது. கடந்த 3 நாட்களாக நீடிக்கும் கனமழை மற்றும் கர்நாடகா அணைகளிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீரால் தமிழ்நாடு எல்லையான பிலிகுண்டுலுக்கு வரும் நீர்வரத்து 20 ஆயிரம் கனஅடியை தாண்டியது. கபினி அணையிலிருந்து காவிரி ஆற்றில் உபரி நீர் திறப்பும் அதிகரிக்கப்பட்டது. கே.ஆர்.எஸ். அணையிலிருந்து திறந்து விடப்பட்ட உபரிநீரால், பிலிகுண்டுலுக்கு நீர்வரத்து அதிகரித்து காவிரி ஆற்றில் வெள்ளம் ஆர்ப்பரித்துச் செல்கிறது. வெள்ளப் பெருக்கு காரணமாக ஒகேனக்கலில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் 2வது நாளாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று முல்லை பெரியாறு அணை உள்பட பல்வேறு அணைகளுக்கு நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் இவ்அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

இந்நிலையில் தமிழ்நாட்டில் இன்றும் கனமழை முதல் மிக கன மழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.





பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 122வது பிறந்தநாளை முன்னிட்டு பகுதிச் செயலாளர் ப.குணாளன் ஏற்பாட்டில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தில் அமைக்கப்பட்ட பெருந்தலைவர் காமராசர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி, இனிப்பு வழங்கி மரியாதை செலுத்தினார். உடன் மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.டி. பூபாலன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கலாநிதி குணாளன், வே.டில்லிபாபு, கோ. கோட்டீஸ்வரன், ஜ.அழகேசன், வட்ட கழக செயலாளர்கள் ஜெ.செல்வேந்திரன், டி.ரவி, மா. கோ.கருணாநிதி, ப.கிருஷ்ணமூர்த்தி, கே.பி.முரளிகிருஷ்ணன், எம்.ஆர்.சீனிவாசன், எ.வேலவன், கே.ஆர்.ஜெகதீஸ்வரன், டி.ஏசுதாஸ், இ.உலகநாதன், ஜெ.நடராஜன் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

### ஒன்றிய பா.ஜ.க. அரசின் அலட்சியத்தால்

# கூலித் தொழிலாளர்கள் கடும் நெருக்கடியில் உள்ளனர்!

## மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஜூலை 18 -*

ஒன்றிய பா.ஜ.க. அரசின் அலட்சியத்தால் இந்தியாவில் கூலித் தொழிலாளர்கள் கடும் நெருக்கடியில் உள்ளனர் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றச்சாட்டியுள்ளார்.



இதுகுறித்து ராகுல்காந்தி சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவில், தினசரி கூலித் தொழிலாளர்கள் முதல் அரசு ஊழியர்கள் வரை அனைவரும் கடும் நெருக்கடியில் உள்ளனர், சிலர் பணவீக்கம், வேலையின்மை மற்றும் சிலர் அரசாங்கத்தின் அலட்சியத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்”.

அனைத்து தரப்பு மக்களின் உரிமைகளுக்காகவும் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நீதிகளுக்காகவும் தான் குரல் கொடுப்பேன். அது வீதியில் இருந்து நாடாளுமன்றம் வரை சென்று குரல் கொடுப்பேன்.

மக்கள் பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவதாகவும், அதை நிறைவேற்ற போராட்டங்களிலும் தான் ஈடுபடுவேன் என்றும் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

முன்னதாக இந்த மாத தொடக்கத்தில் டெல்லி ரயில் நிலையத்தில் லோகோ பைலட்டுகளை சந்தித்த ராகுல்காந்தி, நீண்ட வேலை நேரம், போதிய வசதிகள் செய்து கொடுப்பது இல்லை உள்ளிட்ட காரணங்களை ஊழியர்கள் தன்னிடம் சுட்டிக் காட்டியதாக ஒன்றிய அரசு கடுமையாக விமர்சித்து இருந்தார்.

14 மணி நேரத்திற்கும் மேலாக லோகோ பைலட்டுகள் பணி செய்ய வைக்கப்படுவதாகவும் அதே நேரம் சிறுநீர் கழிப்பது உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கூட லோகோ பைலட்டுகளுக்கு ரயிலில் செய்து கொடுப்பதில்லை என்றும் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

பிரதமர் மோடியின் ஆட்சியில் லோகோ பைலட்டுகளின் வாழ்க்கை தடம் புரண்டு உள்ளதாகவும் அவர்கள் ரயில்வேயின் அக்னி வீரர்கள் போல் நடத்தப்படுவதாகவும் ராகுல் காந்தி கூறி உள்ளார்.

காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்ட வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 17வது வட்டத்தில் வடபெரும்பாக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முகநூல் போராளி த. ஜெ.மாரிஜெயராமன் 16–ஆம் நாள் நினைவஞ்சலி படதிறப்பு நிகழ்ச்சியை சென்னை வடக்கிழக்கு மாவட்ட செயலாளர்– மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார். இதில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ந.பரந்தாமன், பகுதி அவைத் தலைவர் வி.திராவிடவீரன் பகுதி துணை செயலாளர் எஸ்.கௌரி சங்கர்லால் எஸ்.தேவராஜ் பகுதி கழக பிரதிநிதிகள் கே.ராஜா எஸ்.சுகேந்திரன் பிஎன்.குமார் துரை. பசுபதி, வட்ட அவைத்தலைவர் ஜி.கோவிந்தராஜ், துணை செயலாளர்கள் பி.லதாபிரகாஷ், டி.ஸ்டாலின், மாவட்ட அமைப்பாளர்கள் எஸ்.பார்த்தசாரதி, பி.அருண்ராஜ், எம்.எஸ்.ஆர். சேகர்ராஜன், பகுதி அமைப்பாளர்கள் ஆர்.விஸ்வநாதன், ஏ.எஸ். மாரி, பி.அயோத்தியன், ரஜினிகாந்த் மற்றும் எம்.வெற்றி, எம்.சரத்குமார், மாவட்ட மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.